பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 6

முன்னுரை 13

1 ஸல்மான் ஃபார்சீ ﵁ வரலாற்றுச் சுருக்கம் 15

இயற்பெயரும் சிறப்புப்பெயரும் 15

பிறப்பும் வளர்ப்பும் 15

பயணம் 15

சிறப்புகள் 16

கல்வி 16

மாணவர்கள் 18

கலந்துகொண்ட போர்கள் 18

உலகப்பற்றற்ற தன்மை 18

பணிவு 18

மரணம் 19

2 ஸல்மான் ஃபார்சீ ﵁ அவர்களின் வரலாறு 20

3 ஸல்மான் ஃபார்சீ ﵁ வரலாற்றிலிருந்து
படிப்பினைகளும் பாடங்களும் 28

1

ஸல்மான் ஃபார்சீ ﵁ வரலாற்றுச் சுருக்கம்



இயற்பெயரும் சிறப்புப்பெயரும்

ஸல்மான் ﵁ இஸ்லாம் ஈன்றெடுத்த புதல்வராவார். அபூஅப்துல் லாஹ் ஃபார்சீ என்பது அவரது சிறப்புப்பெயராகும். அவரிடம் அவரது பரம்பரையைப் பற்றிக் கேட்டபோது, 'நான் இஸ்லாம் ஈன்றெடுத்த புதல்வன்' (ஸல்மான் இப்னு இஸ்லாம்) என்றார். ஈரானிலுள்ள அஸ்பகானைச் சேர்ந்த இவர் இஸ்லாமைத் தழுவிய வீரராவார்.

பிறப்பும் வளர்ப்பும்

அஸ்பகானில் 'ராம்ஹர்முஸ்' என்ற நகரத்திலுள்ள 'ஜீ' என்ற ஊரில் பிறந்தார். தாம் பிறந்த ஊரிலேயே ஸல்மான் வளர்ந்தார். அவரது தந்தை அந்த ஊரின் தலைவராக இருந்தார். செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தார். எனவே, அவரது தாயார் ஃபாரசீக மொழியை கற்பதற்காக அவரைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினார்.

பயணம்

தமது ஊரான அஸ்பகானிலிருந்து 'ஷாம்' தேசம் சென்றார். பின்னர் அங்கிருந்து 'மோசூல்' எனும் நகருக்குச் சென்று பின்னர் அங்கிருந்து 'நஸீபைன்' என்ற பகுதிக்குச் சென்றார். அதன்பின் ரோம் நாட்டில் அமைந்துள்ள 'அம்மூரியா' என்ற நகரத்திற்குச் சென்றார். அங்கு சிறிது காலம் வரை தங்கினார். அவர் தங்கியிருந்த மடத்தின் பாதிரியார் இறந்த பிறகு அறபு தேசம் நோக்கிப் புறப்பட்டார். அதற்குப் பின் மதீனா வந்தடைந்து நபியவர்களிடம் இஸ்லாமை ஏற்றுக் கொண்டார்.

2

ஸல்மான் ஃபார்சீ ﷺ அவர்களின் வரலாறு

✿

ஸல்மான் ஃபார்சீ ﷺ அவர்களிடமிருந்து நேரில் கேட்டதாக இப்னு அப்பாஸ் ﷺ அறிவிக்கிறார்: 'நான் அஸ்பஹான் பிரதேசத்திலுள்ள 'ஜீ' எனும் ஊரைச் சேர்ந்த ஃபாரசீகனாக இருந்தேன். எனது தந்தை அந்த ஊரின் தலைவராக இருந்தார். அவர் என்னை மிகவும் நேசித்து வந்தார். எந்த அளவுக்கெனில் என்னைப் பெண்பிள்ளையைப் போல வீட்டில் வைத்து பொத்திப் பொத்தி வளர்த்தார்.

அந்த மக்கள் நெருப்பை வணங்கிக்கொண்டிருந்தார்கள். நானும் அவர்களின் மதத்தில் முழு ஈடுபாடு காட்டினேன். எந்த அளவுக் கெனில் வணங்கப்படுவதற்காக மூட்டப்படும் நெருப்பை அணை யாமல் பாதுகாப்பவனாக நான் இருந்தேன்.

எனது தந்தைக்குப் பெரிய பண்ணை நிலங்கள் இருந்தன. ஒரு நாள் அவருக்கு தான் கட்டிக்கொண்டிருந்த கட்டிடத்தில் வேலை இருந்ததால் என்னை அழைத்து, 'மகனே, நம்முடைய கட்டிடத்தில் சில பணிகளை நான் கவனிக்க வேண்டியிருப்பதால் நீ நம்முடைய பண்ணை நிலத்திற்குச் சென்று அங்குள்ள வேலைகளைக் கவனி' என்று கூறினார். நான் பண்ணை நிலத்திற்குப் புறப்பட்டேன்.

வழியில் ஒரு கிறித்தவ தேவாலயத்தைக் கண்டேன். அங்கு மக்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பதைச் செவியுற்றேன். எனது தந்தை என்னை வீட்டிலேயே வைத்து வளர்த்ததால் நான் மக்களின் விசயங்களைப் பற்றி அறியாதவனாக இருந்தேன். அந்த மக்களின் ஓசையை செவியுற்ற நான் அவர்கள் செய்வதை அறிந்துகொள்ளும் பொருட்டு அந்த ஆலயத்தின் உள்ளே நுழைந்துவிட்டேன். அங்கு அவர்களின் தொழுகையைக் கண்டபோது அது என்னை ஈர்த்துவிட்டது. 'நிச்சயமாக இந்த மதம் நமது மார்க்கத்தைவிடச் சிறப்பாக இருக்கிறது' என்று எண்ணிக்கொண்டேன். சூரியன் மறையும்வரை அங்கேயே இருந்தேன். என் தந்தையின் பண்ணை

3

ஸல்மான் ஃபார்சீ ﵁ வரலாற்றிலிருந்து படிப்பினைகளும் பாடங்களும்

✿

1. இந்த வரலாற்றை அறிவித்த இப்னு அப்பாஸ் ﵄, கல்வியின் ஊற்றிலிருந்தே நேரடியாக அதனைப் பருகும் ஆர்வம் கொண்டிருந்தார். எனவேதான் இதை அறிவிக்கத் தொடங்கும் போது, 'நான் ஸல்மானிடமிருந்தே நேரடியாக இதனைக் கேட்டேன்' என்று கூறுகிறார்.

2. சிறு வயதாக இருந்தாலும், சிரமத்துடன்கூடிய நீண்ட தொலைவு என்றாலும் ஸல்மான் தமது நோக்கத்தை அடைந்துவிடுகிற உறுதியுடன் பயணம் மேற்கொண்டார்.

3. இஸ்லாமை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அசத்திய மார்க்கத்தில் இருந்தபோதும் ஸல்மான் முழு ஈடுபாட்டுடன் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டார். ஆனால், சத்திய மார்க்கத்தில் இருக்கும் நாம் அல்லாஹ் நமக்கு ஆரோக்கியத்தையும் வழங்கியிருக்க எந்த அளவு முழுமையாக ஈடுபடுகிறோம்?

4. அவரது தந்தை வேறு பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதே ஸல்மான் வெளியில் செல்வதற்கு ஆரம்பமாகவும், சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு காரணமாகவும் அமைந்தது.

5. தொழுகை உள்ளங்களில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதுதான் பலர் இஸ்லாமை ஏற்றுக்கொள்வதற்கும், நேரான வழியின் பக்கம் திரும்புவதற்கும் காரணமாக அமைந்திருக்கிறது. 'அங்கு அவர்களின் தொழுகையைக் கண்டபோது அது என்னை ஈர்த்துவிட்டது.'

6. 'அந்த மக்களின் ஓசையை செவியுற்ற நான் அவர்கள் செய்வதை அறிந்துகொள்ளும் பொருட்டு அந்த ஆலயத்தின்